III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

O.S. 19/2013

Deposition of witness for the Defendants/DW1
solemnly by Thiru.Gothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 22-02-2023

Name : M.Jayakumar

Father'sName : Munusamy

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

பி.த.சா.ஆ2 ல் புல எண் 109/24 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பரப்பளவு 195 ச.மீ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா.ஆ1ன் படி தானம் கொடுக்கப்பட்ட சொத்தின் புல எண் 51/2, புதிய புல எண் 109/24 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தானப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் பழைய புல எண் 51/2 என்றும், புதிய புல எண் 109/24 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் குறிப்பிடும் இந்த சொத்து பழைய புல எண் 51/2, புதிய புல எண் 109/24 ல் அடங்கியுள்ளது என்றால் சரிதான். வழக்கினுடைய சொத்து என்று நான் குறிப்பிடுவது இதுதான். இந்த வழக்கை வாதி பழைய புல எண் 51/4, புதிய புல எண் 51/16 என்ற சொத்தின் உரிமை கோரி தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியாது. மேற்கூறிய சர்வே எண்ணில் உள்ள சொத்தைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. 2012ம் வருடம், வாதி கோரியதன்பேரில் தாசில்தார் அலுவலகத்திலிருந்து ஒரு சர்வே மேற்கொள்ளப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வரைபடத்தை காண்பித்தால், எனது சொத்தை அடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் முடியும். (அதன் பின்னர் சாட்சி முடியாது என்று கூறுகிறார்.) 2012ல் சர்வே மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு எனக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றும், அந்த சர்வே நடந்தது பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. அந்த சர்வேயில் நானும் கலந்துகொண்டேன் என்றும், அது சம்பந்தமான ஆவணங்களில் அவ்விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அந்த சர்வேக்கு முன்னர் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றும், அதன் பேரில் நடைபெற்ற விசாரணையில் நான்

கலந்துகொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதனை தொடர்ந்து தான் காவல் உதவி ஆணையர் அந்த சர்வேயிக்கு பாதுகாப்பு அளித்திருந்தார் என்றும், அந்த விவரம் எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த சர்வேயின்படி நான் பழைய சர்வே எண் 51/4, புதிய சர்வே எண் 51/16 ல் அடங்கிய சொத்தில் நான் ஆக்கிரமித்திருந்தது தெரியவந்தது என்றும், அந்த விவரம் எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. அதன்பேரில் ஏற்பட்ட FMB வரைபடத்தில் நான் அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்திருந்த இடம் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் அரசாங்கம் கட்டிடம் கட்டிக்கொடுத்ததற்கான ஆதாரம் என்னிடம் உள்ளதா என்றால், Group house Scheme அடிப்படையில் கட்டிக்கொடுப்பதற்கான ஆதாராம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உள்ளது. 2010ம் வருடத்திற்கு பிறகு நான் வழக்கு சொத்தில் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டிக்கொண்டேன் என்றும், ஆதலால் தான் என்னிடம் ஆதாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2010ம் வருடத்திற்கு பிறகு நான் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அவ்வருடத்திற்கு முந்தைய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. புல எண். 51/2க்குரிய ஆவணங்களை வைத்து நான் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பழைய புல எண் 51/4, புதிய புல எண்.51/16க்குரிய ஆவணங்கள் என் பெயரில் உள்ளதா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றும், இந்த வழக்கு சொத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2010க்கு பின்னர் பல தடவைகள் வாதி ஆக்கிரமிப்பை அகற்றிக்கோரி என்னிடம் கேட்டார் என்றும், நான் அவரை மிரட்டி அனுப்பினேன் என்றால் சரியல்ல. அதன் காரணத்தினால் தான் வாதி என் மீது 2012ம் வருடம் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.